சான்றோர் மனு, சான்றோர்க் குலத்திருமண நடவடிக்கை, குடித்தனவொழுக்கம், வேயின் ஹ அர்பயீம், தெகில்லீம் என்ற தெய்வாகமச் சங்கீதம், ரூத்தம்மானை சாலமோனின் நீதிமொழி, ஏரேமியாவின் புலம்பல், சபைப்பிரிவினை, அடைக்கல நகரம், பூசாரி அரசாங்கம், தமிழ் - சமஸ்கிருத அகராதி A Brief sketch of the Hindu Christian Dogmas, Ethnography, Affinity of the Diravidian Language போன்ற பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

1857ம் ஆண்டிற்கும் 1883ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நாசரேத்தில் கல்விச்சாலை ஒன்று மிகவும் மேன்மையாக நடைபெற்றுள்ளது. அதை ஐயா அவர்களே கவனித்து வந்துள்ளார்கள்.

மூக்குப்பீறி S.P.G. நாசரேத் கேமரர் ஐயா அவர்களின் மேலாண்மையின் கீழ் நடந்து வந்தது. அப்பொழுது மூக்குப்பீறி வாசிகளில் இரு குடும்பத்தாருக்குள் பொழித்தாவாவும், பனை மரங்களின் தாவாவும் ஏற்பட்டு, அது நாளடைவில் சபை முழுவதையும் இரு சாரராக்கியது. சபை சமாதானக் குறைவினால் சஞ்சலப்பட்டது. இதை சமாதானப்படுத்த கேமரர் ஐயர் எத்தனையோ பெரியோர்களை அனுப்பிப் போதனை கொடுத்த போதிலும் பயனற்று வீணாயின. இறுதியில் ஐயர் அவர்கள் தம் கையின் கீழ் பணியாற்றி வந்த கனம் அ.நா.சட்டம்பிள்ளை ஐயா அவர்களை அச்சபையில் ஆராதனைக்கு அனுப்பி ஒரு நாள் போதனை கொடுத்து வருமாறு பணித்தனர். ஐயா அவர்கள் 1 இராஜாக்கள் 21 : 19ம் வசனத்தை அடிப்படையாகக் கொண்டு சரித்திர ரூபகரமாகவும், போதனையாகவும் சுமார் ஒரு மணி நேரம் தேவ செய்தி கொடுத்தார்கள். மத்தியான ஆராதனை முடிவடைந்தது. அவ்வாரதனைக்கு இரு கட்சிக் காரர்களும் அவர்களைச் சார்ந்த ஆண், பெண் இருபாலரும் வந்திருந்தனர். அவர்களின் உள்ளத்தில் பெரிய அசைவு உண்டாயிற்று. ஆராதனை முடிந்த சில மணி நேரத்திற்குள் இரு கட்சித் தலைவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும், தாங்களாகவே சமாதானம் செய்து கொண்டனர். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து தாவா முடிவு பெற்றது. சபை ஜனங்களுக்குள் ஐக்கியம் நிலவி அமைதியும் அகமகிழ்வும் உண்டாயிற்று.

ஒரு சமயம் மூக்குப்பீறி ஊருக்கு வடபுறத்திலுள்ள தார்பத்தில் நஞ்செய் நிலம் அதிகமுண்டு இதனை இறைவை நஞ்செய் என்றழைப்பர். நஞ்செய் பயிர் செழித்தோங்கி விளைச்சல் ஏற்படுவதற்கு முன் மழையின்றி பயிர்கள் வாடி வதங்கியது. அப்போது ஒரு ஓய்வு நாளன்று மத்தியான ஆராதனை முடிந்தவுடன் கனம். ஐயா அவர்களும், இ.ஏ.இ.சபையின் முக்கியஸ்தர்களும் நஞ்செய் பயிர்களின் மத்தியில் நின்று ஜெபித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஜெபம் செய்து முடிவடைவதற்கு முன்னரே பெருமழை சொரிந்தது என்றும், யாவரும் கர்த்தரைத் துதித்தனர் என்றும் அவரது நாமத்தை மகிமைப்படுத்திக் கொண்டே வீடு திரும்பினர் என்று சொல்லும் வரலாறும் உண்டு.

வியாதிப்பட்ட ஒருவரது வீட்டில் ஜெபம் செய்ய பிரவேசித்தவுடன் இந்த வீட்டில் இன்னின்ன குறைகள் இருக்கிறது. உடன் நிவர்த்தி செய்ய வேண்டும். எனச்சொல்லி, குறை நிவர்த்திக்கும் ஒரு ஒழுங்கை குறிப்பிட்டு அதன் பின் ஜெபிக்க அதிசய சுகம் அடைந்தவர்கள் அனேகர் உண்டு. அத்துடன் வீட்டிற்கு யாராவது சுகயீனத்துடன் ஜெபிக்க வருகையில் அவர்களுக்காக ஜெபம் செய்து விட்டு, ஆலயத்திற்கு அருகில் அமைந்த சதுர வடிவ கிணற்றில் தண்ணீர் குடித்துவிட்டு போகச் சொல்வார்களாம். அப்படிச் செய்கையில் ஆண்டவரால் சுகம் பெற்றவர்கள் அதிகம் பேர் என்ற செய்தி இன்றும் நிலவுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் உள்ள சங்கீதப்புத்தகத்திலுள்ள 150 சங்கீதங்களையும், ஐயா அவர்கள் தேவ அருள் பெற்று கீர்த்தனையாகப் பாடியுள்ளார்கள். அத்துடன் உலாவு தெய்வ வாக்காகிய பத்துக் கற்பனைகள், அருமை இயேசு இரட்சகரின் வாக்காகிய மாதிரி ஜெபம், தூதர் பாட்டுகள், புறச்சாதி பாட்டு, மரியாள் பாட்டு, சகரியா பாட்டு, சிமியோன் பாட்டு, யூதர் தேசத்துக் கடைசிநாள் பாட்டுகள் அடங்கிய அனுபந்தக் கீதங்களையும், அநேக திருநாள் கீதங்கள் என்றழைக்கப்படும் பண்டிகை காலப் பாட்டுகளையும் தெய்வ நடத்துதலால் சுயமாகப் பாடிப் புத்தக வடிவாக்கியுள்ளார்கள். அனைத்து கர்நாடக இசையில் இராக தாளத்துடன் அமைக்கப்பட்டிருப்பது சபைக்கென தனித்தன்மையை நிலைநாட்டுவதுடன் கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்துவதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

இவர் ஒரு பேரறிஞராகவும், புகழ்மிக்க பெருமகனாராகவும், தீவிரப் படிப்பாளராகவும் பொறுமை மிக்க மாணக்கராகவும், நினைவாற்றல் மிக்க மானிடராகவும், மரணம் வரை செயலாற்றிய தீரராகவும், வேத வித்தகராகவும், தெய்வ அருள் பெற்றவராகவும், மானிடவதாரச் சுவாமியின் ஊழியராகவும் இ.ஏ.இ. சபையின் நிறுவனராகவும் இருந்து இவ்வுலகில் பெரும் புகழ் பெற்று தமது 96வது அகவையில் 16.01.1919 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். நெல்லை மாவட்டம் புகழ் மிக்க தொரு பெரியவரை இழந்தது.

ஐயா அவர்களின் மரணச் செய்தியை 24.01.1919 அன்று ''தி மெட்ராஸ் மெயில்'' என்ற நாளிதழ் கீழ்க்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## An Extract " The Madras Mail", dated the 24th January 1919

## "RABBI CHATTAMPILLAI – AIYA'

### A Distinguished Scholar

A remarkable personality has been removed from Tinnervely by the death, at midnight on Thursday, the 16th instant, of Mr. Chattampillai – Aiya, a very old resident of Prakasapuram, in the Tinnervely district. Born in 1823, at Korkai, the capital of an ancient Pandya King, he had been bapitised with the name Arumainyakam, but in his youth by his learning and attainments he earned the honorific title of Chattampillai – Aiya and ever afterwards he was better known by his title than by his actual name. Educated at the S.P.G. Seminary at Sawyerpuram, under the late Rev.Dr.G.U.Pope, he was learned in English, Latin, Greek, Hebrew and Aramaic and was selected for the Ministry in the Church. But his great attachment to the Judaistic system of theology and his abhorrence of some of the early Christian heresies led him ultimately to decline the call and gave up his connection with the Church. In 1850 he proceeded to Madras, where he came into intimate contact with a learned India Missionary from Tinnevelly, whose influence led him in.

1919ம் ஆண்டு The Madras Mail என்ற ஆங்கில நாளிதழ் 'A Distinguished Scholar' என்ற தலைப்பிட்டு தலையங்கம் எழுதும் அளவுக்கும் பெருமைகளைப் பெற்ற சிறந்த அறிவாளியாகிய அருமை நாயகம் சட்டாம்பிள்ளை அய்யா அவர்களுடைய சேவைகளும் கீர்த்தனைப் பாடலும் காலத்தை வென்று இன்றும் நிலைத்து நிற்கிறது.

**J.D.சாக்ரடீஸ், M.A., B.L.,**

வழக்கறிஞர் கோவை